மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பொன்னேரி

அ.வ.எண் 130/2010

19.07.2018

வாதி தரப்பு சாட்சி 1, குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்குரையில் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.100/- என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்கு ஆதாரமாக ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்தின் மதிப்பு என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.1 ஆன ஆவணம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம்தான் என்றால் சரிதான். 19.11.2009 வரைதான் வில்லங்கம் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 08.06.2010 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 19.11.2009க்கும் 08.06.2010 -க்கும் இடைப்பட்ட காலத்தில் வில்லங்க சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சித்தப்பா ஜெயராமரெட்டியார் என்பவர் அவரது மகன்களுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றிய விவரம் தெரிந்துவிடும் என்பதற்காகவே நான் மேற்சொன்ன காலகட்டத்தற்கான வில்லங்க சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 17.07.1997-ல் ஆறுமுக ரெட்டியார் என்பவர் ஜெயராம ரெட்டியார் என்பவருக்கு பதிவுசெய்யப்பட்ட கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சேனிநாயக்கர் என்பவர் 24.04.1972-ல் அவருடைய சொத்தை மேற்படி ஜெயராம ரெட்டியாருக்கு பதிவு செய்யப்பட்ட கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன கிரைய சொத்திற்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சேனி நாயக்கர் யார் என்று எனக்கு தெரியாது. வரதன் எனக்கு சித்தப்பா. வரதனின் மனைவி இந்த வழக்கில் 4-ம் வாதி ரேணுகா என்றால் சரிதான். அவருடைய மகன் சரவணன் வழக்கில் 5-ம் வாதி என்றால் சரிதான். 4 மற்றும் 5-ம் வாதிகள் அவர்களுக்கு சேரவேண்டிய பாகசொத்தை 2வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே கிரையம் செய்துகொடுத்த சொத்தையும் வழக்கு சொத்தாக சேர்த்து அதில் பாகம் கோருகின்றேன் என்றால் சரியல்ல. 1-வது பிரதிவாதி ஜெயராம ரெட்டியார் தற்போது உயிருடன் இருக்கின்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயராம ரெட்டியார் இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் கோவிலுக்கு

LTI of Lalitha

சென்றிருந்ததால் அப்போது எனக்கு தெரியாது. திரும்பி வந்தவுடன் தெரியவந்தது. இறந்துபோன ஜெயராம ரெட்டியாருக்கு மூன்று மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள். அவர்களின் பெயர்கள் கலா, சாந்தி, அமுதா ஆகியோர் இந்த வழக்கின் 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் என்றால் சரிதான். ஜெயராமரெட்டி என்பவர் 30.04.2018 அன்று இறந்தார் என்று சொன்னால் அதை மறுக்கமுடியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயராமரெட்டியார் என்பவர் இறந்துபோன விவரம் தெரிந்தும் அவர்களுடைய வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக இன்றைய தேதி வரையில் சேர்க்கவில்லை என்றால் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. எனவே இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே என் தகப்பனார் இருக்கும்போது பாகப்பிரிவினை செய்துகொண்டதை ஒப்புக்கொண்டதினால் பாகப்பிரிவனை கோரி பரிகாரம் கேட்டுள்ளது தவறானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் கூட்டுக்குடும்ப சொத்து என்பதை நிரூபிக்க எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பு குறித்து எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் வழக்கு சொத்தின் மதிப்பு சரியானதல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்தின் மதிப்பு பல லட்சங்கள் இருக்கும் என்ற காரணத்தினால் இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி தரப்பு வழக்கறிஞரால் மேற்படி கூற்று எதிர்வழக்குரையில் கூறப்படவில்லை என்பதால் ஆட்சேபணை செய்யப்பட்டது. எதிர்வாதிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணத்தினால் தான் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

LTI of Lalitha

[illegible] நீதிமன்றத்தில் எழுதப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக்
கொண்டு என்முன் கையெழுத்து செய்தார்

19/7/18

சார்பு உரிமையியல் நீதிபதி
பொன்னேரி